2009 ஜூலை 21] [திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்]

அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் இந்தப் பிரச்சினையை எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற அரசு பரிசீலிக்கும்.

(அஐ) அரக்கோணம் எம்.ஆர்.எப். ஆலைத் தொழிலாளர் பிரச்சினை மற்றும் சோளிங்கர் யோக நரசிம்மர் கோயிலுக்கு ரோப் கார் வசதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சோளிங்கர் தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் எம்.ஆர்.எப். தொழிற்சாலையின் நிருவாகத்திற்கும், அங்கிருக்கின்ற அங்கீகரிக்கப்படாத சில சங்கங்களுக்கும் இடையே நீண்டகாலமாக பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. இது தொடர்பாக உயர் நீதிமன்றத்திலே வழக்குகூட ஒன்று நிலுவையிலே இருக்கிறது. இந்நிலையில் நேற்றுகூட அவர்கள் மறியலில் ஈடுபட்டார்கள். ஏறத்தாழ 1,000–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அங்கே பணிபுரிகின்றார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய பிரச்சினையைக் கனிவோடு கண்டறிந்து, அந்த நிருவாகத்திற்கும் சங்கங்களுக்கும் இடையே ஒரு தீர்வை ஏற்படுத்தி அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்காக கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து முக்கியமான இந்த இரண்டு பிரச்சினைகளை வைக்கிறேன்.

சோளிங்கர் யோக நரசிம்மர் ஆலயத்திற்கு ஒரு Rope Car–ஐ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுத்தால், கண்டிப்பாக யோக நரசிம்மருடைய முழு அருள் அவருக்குக் கிடைக்கும். (சிரிப்பு) எனவே, அவருடைய அருள் கிடைக்க Rope Car–ஐ அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

(அஒ) வேலூர் மாவட்டம், தோல் தொழில் கழிவுநீரைக் கடலில் கலக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.